# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.103/2022

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **எ.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்புமணி | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

**மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை:**

விபத்து சமயத்தில் நான் தான் காரை ஓட்டிசென்றேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என்வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். குற்றஇறுதிஅறிக்கை புலன்விசாரணைக்கு பின்னர் இரண்டு வாகனங்களின் ஓட்டுநர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை மற்றும் குற்றஇறுதிஅறிக்கை எனக்கு எதிராக தவறாக போடப்பட்டுள்ளதாக நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என்னுடைய வாகனம் மோதி இறப்பு ஏற்பட்டதால் தான் என்மீது குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் ஓட்டிசென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால் இறந்துபோனவர் தான் விபத்திற்கு காரணம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு இரண்டு வாகன ஓட்டுநர்களும்

காரணம் என்பதால் என்வாகனத்தின் உரிமையாளர் மனுதாரர்களுக்கு நஷ்டஈடுகொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.